பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ., பி. எல்.

மலர் : 20] சென்னை : ஆவணி 31 (16—9—72) சனி

வெளியூர் : புரட்டாசி 1 (17—9—72) ஞாயிறு [இதழ் : 79

## தமிழ்நாடு அரசு உத்தரவு

சென்னை, செப். 16—

வறட்சியினால் பாதிக்கப்பட்ட பல்வேறு மாவட்டங்களில் நில வரி--கடன் வசூல்--வேளாண்மை வரி பாக்கிகள் வசூல்களை இந்த ஆண்டு டிசம்பர் 31-ம் நாள் வரையில் ஒத்திவைக்கத் தமிழ்நாடு அரசு உத்தரவிட்டிருக்கிறது.

வறட்சிப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருக்கும் மாவட்டங்களில் பெரிய பாசனத் திட்டங்களால் பயன்பெறும் ஆயக்கட்டுப் பகுதிகளுக்கு இந்தச் சலுகை கிடையாது.

# வாழ்க -- பெரியார்

சென்னை, செப். 16—

தமிழ் இனத்தைத் தட்டியெழுப்பிப் பகுத்தறிவு உணர்ச்சியை ஊட்டியவரும் – தன்மான இயக்கம் கண்டவரும் – தமிழர்கள் தலைநிமிர்ந்து நடக்க அரும் பாடு பட்டு வருபவரும் – நம்மையெல்லாம் ஆளாக்கிய அண்ணனை நாட்டுக்கு வழங்கியவருமான தந்தை பெரியார் அவர்கட்கு நாளை 94-வது வயது பிறக்கிறது.

உலகப் பெரியார்கள் வரிசையில் ஒப்பற்ற இடத்தைப் பெற்றுள்ள தந்தை பெரியார் அவர்கள், இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து – நாடும் மக்களும் நலமெய்திட வழிகாட்ட வேண்டும் என விழைகிறோம்.

வாழ்க -- பெரியார் பல்லாண்டு!

வெல்க -- அவர்தம் நற்றொண்டு!

# தமிழ்நாட்டில் வறட்சி நிலை

# முதல்வர் நடவடிக்கை

## நிவாரணப் பணிகள் பற்றி கலெக்டர்களுடன் ஆலோசனை

திருநெல்வேலி, செப். 16—

தமிழ்நாட்டில் பல இடங்களிலும் வறட்சி நிலை ஏற்பட்டிருப்பதால், அந்தந்த மாவட்டக் கலெக்டர்களுடன் இத்திங்கள் இறுதி வாரத்திலோ அல்லது அடுத்த திங்கள் முதல் வாரத்திலோ கலந்தாலோசிக்கப் போவதாக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஏற்கனவே வருவாய் வாரிய உறுப்பினர்கள் சுற்றுப்பயணம் செய்து அறிக்கை அளித்திருப்பதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

பருவ மழை தவறி வருவதால், வறட்சி நிலை மேலும் பல பகுதிகளையும் பாதிக்கக்கூடும்; ஆகவே, மாவட்டக் கலெக்டர்களுடன் கலந்துபேசி – எடுக்கப்படவேண்டிய நிவாரணப் பணிகள் பற்றி முடிவு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

"மத்திய அரசிடம் எந்த அளவுக்கு உதவி கேட்பது என்பதும் அப்போது தீர்மானிக்கப்படும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இத்தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:—

"பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் வசதிக்காக ஏற்கனவே ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது; அப்பகுதிகளில் கடன் திருப்பித் தருவதை ஒத்திவைக்கவும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தரவேண்டிய கடன்களைக்கூட ஒத்திவைப்பது குறித்து அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது.

### நியாய விலைக் கடைகளில்---

நியாய விலைக் கடைகள்மூலம் பருப்பு வகைகள்--எண்ணெய் ஆகியவைகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது; இது படிப்படியாகச் செயல்படுத்தப்படும்; முதலில் மாவட்டத் தலைநகரங்களில் துவங்கி பிறகு பெரிய நகரங்களுக்கு விரிவுபடுத்தப்படும்."

# குடியிருப்பு மனை பட்டா பெறுவோர் பணம் செலுத்த வேண்டியதில்லை

## அண்ணா பிறந்த நாளில் முதலமைச்சர் அறிவிப்பு

கும்பகோணம், செப். 16—

"குடியிருப்புச் சட்டம் செய்தபோது, முதலில் அந்த இடத்தை மிராசுதாரர்களிடமிருந்து விலைக்கு வாங்கி -- அதை ஏழை விவசாயத் தொழிலாளர்கட்குக் கொடுப்பது என்றும் -- அந்த நிலத்துக்கு உரிய தொகையை 10 அல்லது 15 ஆண்டுகளில் விவசாயத் தொழிலாளர்கள் திருப்பித் தர வேண்டுமென்றும் சட்டம் செய்யப்பட்டது.

'தஞ்சை மாவட்டத்தில், 5,000 மிராசுதாரர்கள், ஏழை விவசாயிகள் இருந்த இடத்தை அவர்கட்கு இனமாகவே கொடுத்துவிட்டார்கள்.

'இப்போது ஏழத்தாழ ஒன்றரை இலட்சம் விவசாயிகட்குக் குடியிருப்பு மனை உரிமைப் பட்டா வழங்கப்படவிருக்கிறது; முன்பு செய்த சட்டப்படி விவசாயிகள் திரும்பப் பணம் கொடுக்க வேண்டியது இருந்தது; இனி, திருப்பித் தரவேண்டியது இல்லை; நிலக் கிரயத்தின் முழுப் பொறுப்பையும் அரசே ஏற்றுக்கொள்ளும்.

'தஞ்சை மாவட்டத்தின் குடியிருப்புச் சட்டம் மற்ற மாவட்

(4-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்நாடு முழுவதும் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா

## பல்வேறு நிகழ்ச்சிகளில் கழகத் தலைவர்--பொதுச்செயலாளர் -- பொருளாளர் -- கழக முன்னணியினர் பங்கேற்பு

சென்னை, செப். 16—

பேரறிஞர் அண்ணா அவர்கள் 64-வது பிறந்தநாள் விழா, நேற்று தமிழ்நாடு முழுவதிலும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது; கழகத் தோழர்களும் -- பொது மக்களும் ஆங்காங்கே அண்ணா சிலைக்கு மலர்மாலைகள் அணிவித்தும், ஏழைகளுக்கு உணவு அளித்தும் -- சிறுவர்களுக்கு இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர்.

சென்னையில் அதிகாலையிலேயே பொதுச் செயலாளர் நாவலர் -- அமைச்சர் என். வி. நடராசன், மேயர் காமாட்சி செயராமன், மாவட்டச் செயலாளர் நீலநாரயணன் உள்ளிட்ட நிர்வாகிகள் கிளைக்கழகத் தோழர்கள் ஆகியோர் அண்ணா சிலைக்கு மாலைகள் அணிவித்துத் தங்கள் மரியாதையை தெரிவித்துக் கொண்டனர்.

சென்னை மாவட்ட திராவிட மாணவர்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், பல்வேறு சார்பு மன்றங்கள்-- அமைப்புகள் நிறுவனங்கள், சார்பிலும் அண்ணா சிலைக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களும் அமைச்சர்களும் - கழக முன்னணியினரும் பல்வேறு நிகழ்ச்சிகளில், பொதுக் கூட்டங்களிலும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

சென்னை நகரில் பல்வேறு தொகுதிகளிலும் நாவலர் -- பேராசிரியர் அன்பழகன் ஆகியோர் கொடியேற்றிவைத்து இனிப்புகள் வழங்கினர்.

கழகம் பொருளாளர் எம். ஜி. ஆர். அவர்கள், பறங்கிமலைத் தொகுதியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தார்.

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், நெல்லைச் சந்திப்பில் அண்ணா சிலையை திறந்துவைத்தும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

## சென்னையில் மாபெரும் ஊர்வலம்---

### அமைச்சர்கள் பங்கேற்பு

சென்னையில் நாளை மாபெரும் ஊர்வலம் நடைபெறுகிறது.

ஊர்வலத்தின் தலையாய சிறப்பு—கழகத் தலைவர் கலைஞர், பொதுச் செயலாளர் நாவலர், துணைப் பொதுச்செயலாளர்கள், அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள்வதுதான்.

ஊர்வலத்தில் பல்வேறு சிறப்பு அம்சங்கள் இடம்பெறுகின்றன; மாணவர்கள்-தொழிலாளர்கள்-கழக முன்னணியினர்--தாய்மார்களின அணிவகுப்பு கண்கொள்ளாக் காட்சியாகும்.

அண்ணா சாலையிலுள்ள அண்ணா சிலை வண்ண விளக்குகளின அலங்காரங்களுடன்திகழ்கிறது.

## பொதுக்கூட்டம்

இரவு 7-மணிக்கு கடற்கரை சீரணி அரங்கில் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

பொதுச்செயலாளர் நாவலர் தலைமை தாங்குகிறார்.

கூட்டத்தில் கழகத் தலைவர் கலைஞர்--அமைச்சர் பெருமக்கள்—கழக முன்னணியினர்--மாவட்ட நிர்வாகிகள்—பகுதிச் செயலாளர்கள் பங்கேற்கின்றனர்.

திரைப்பட இசைத் துறையைச் சேர்ந்த கே. வி. மகாதேவன் குழுவினரின் மெல்லிசையும், 'உனைத்தான் தம்பி' என்ற நாடகமும் நடைபெறுகின்றன.

## தெ. ஆ. மாவட்டத்தில் இரு புதிய அணைகள்

விருத்தாசலம், செப். 16 –

தென்னாற்காடு மாவட்டத்தில அருங்குறுக்கை கிராமம் அருகில் கெடிலம் ஆற்றின் குறுக்கே ஒரு சிறிய அணை கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது; இதற்காக 1.75 கோடி செலவிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்கிறது.

இதே போன்று பாதூருக்கு அருகில் மற்றோர் அணை கட்டுவதற்கு ஆலோசனை செய்யப்படுகிறது: கெடிலம் -- சேஷ ஆறு கலக்கும் இடத்தில் இந்த அணை கட்டப்படும்.

இந்தத் தகவலைப் பொதுப் பணித் துறை நிர்வாகப் பொறியாளர் என். சம்பந்தம் தெரிவித்தார்.

## உணவு எண்ணெய் இறக்குமதிக்குத் திட்டம்

புதுடில்லி, செப். 16—

நாட்டில் உணவு எண்ணெய்ப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காக வெளிநாடுகளிலிருந்து மேலும் உணவு எண்ணெய் வகைகளை இறக்குமதி செய்ய மத்திய அரசு திட்டமிட்டிருக்கிறது.

நம்நாடு
ஆசிரியர்: இரா. செழியன் எம்.பி.
திருவள்ளுவராண்டு 2003 ஆவணி 31 (16—9—72) வெள்ளி

# செப்டம்பர்--17

திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றி இருபத்து மூன்று ஆண்டுகள் முடிந்து இன்று இருபத்து நான்காம் ஆண்டு தொடங்குகிறது.

1949-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் பதினேழாம் நாள் சென்னை--இராபின்சன் பூங்காவில் கொட்டும் மழையில் பேரறிஞர் அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட நாள்முதல் தமிழகத்தின் தனிப்பெரும் மக்கட் சக்தியாகவும் -- ஆளுங்கட்சியாகவும் விளங்கும் இன்றுவரை கழகம் வளர்ந்த வரலாற்றை -- அதன் சாதனைகளை நினைவுகூர்ந்தால், வியப்பும் மலைப்பும் ஏற்படத்தான் செய்யும்; 'நாம் நனவுலகில் இருக்கிறோமா அல்லது கனவுலகில் இருக்கிறோமா' என்றுகூட ஐயம்படத் தோன்றும்.

பெரியாரை விட்டுக் கண்ணீரோடு பிரிந்த நாம், கழகத்தை இந்த அளவுக்கு வளர்க்கச் சிந்திய கண்ணீரும் செந்நீரும்தான் எவ்வளவு!

மாற்றாரின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் -- ஏளனத்துக்கும் ஆளானோர் எவ்வளவு பேர்! எதிரிகளின் சதிகளுக்கு இலக்காகியும், அன்றைய ஆட்சியாளரின் அடக்குமுறைகளுக்கு ஆட்பட்டும் உடலுறுப்புகளை இழந்தோர், உயிரையே பலிகொடுத்தோர் எத்தனையெத்தனைப் பேர்!

இலட்சியத்திற்காகத் தங்கள் உடல்--பொருள்--ஆவிகளைத் தியாகம் செய்த அத்துணைத் தியாகச் செம்மல்கட்கும் இந்த நேரத்தில் நமது வீர வணக்கத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

உலகில் எந்த ஓர் அரசியல் கட்சியும் இவ்வளவு குறுகிய காலத்தில் -- இவ்வளவு பெரிய மக்கட் சக்தியாக மாறி ஆட்சியைக் கைப்பற்றியதாக வரலாறு கிடையாது.

இந்தப் புதிய வரலாற்றைத் தமிழகத்தில் படைத்த வரலாற்று மனிதர் – மாமேதை அண்ணா அவர்கள்தாம் என்பதை நினைக்கும்போது நம் உள்ளம் பூரிக்கிறது – உடலெல்லாம் சிலிர்க்கிறது.

அந்த மாமேதையின் தலைமையிலே நாமெல்லாம் பணியாற்றிக் கழகத்தை வளர்த்த பெருமையை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் உள்ளம் புளகாங்கிதம் கொள்கிறது.

வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சியை ஏற்படுத்தி – தாழ்ந்த தமிழகத்தைத் தலைநிமிரச் செய்து, 'தமிழன் யாருக்கும் தாழ்ந்தவன் அல்லன் – தமிழன் யாரையும் தாழ்த்துபவனும் அல்லன்' என்ற உண்மையை நிலைநாட்டி, தமிழ் வாழவும் – தமிழ்நாடு தழைக்கவும் வழிகாட்டிவிட்டுச் சென்ற அந்த மாமேதை நம்மோடு இல்லையே என்ற ஏக்கப் பெருமூச்சும் உடன் எழுகிறது.

எதிரிகள் நம்மைத் தாக்கியபோதெல்லாம், 'தாக்குவோரைத் திரும்பித் தாக்காதே – தாங்கிப் பழகிக் கொள்ளுங்கள்' என்று தம்பிமார்கட்கு அன்புக்கட்டளையிட்டாரே அண்ணா – அந்தக் கட்டளையை ஏற்று அதன்வழி நடந்ததன் பயன்தான் இன்று ஆட்சி நமதானது!

அடக்குமுறைகளை ஆட்சியாளர்கள் ஏவியபோதெல்லாம், 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்' என்று நமக்கெல்லாம் அறிவுரை கூறினாரே நம் அருமை அண்ணா, அந்த அறிவுரையை ஏற்றதன் பலன்தான் இன்று நாம் பெற்றுள்ள இந்த ஏற்றம்!

தம்மை ஏசியவர்களைப் பார்த்து, 'வாழ்க – வசவாளர்கள்' என்று கூறிடும் ஒரு மனிதரைக் காணமுடியுமா? அந்த மாமனிதன் நமது அண்ணா என்பதால்தான், இந்தக் கழகம் இந்நிலையை எய்தியது!

'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்று எடுத்துச் சொல்லி, இந்நாட்டு அரசியலில் நாகரீகத்தை வளர்க்க – சனநாயகப் பண்பை உருவாக்க முயன்ற அண்ணா அவர்கள் நம் வழிகாட்டி என்பதால்தான், நமது இயக்கம் வலிவும் பொலிவும் பெற்று வளர முடிந்தது!

'ஏச்சுக்கு ஏச்சு—தாக்குதலுக்குத் தாக்குதல்' என்று முனைந்திருப்போமானால், காங்கிரசுக்கு நேர்ந்த கதிதான் நமக்கும் நேர்ந்திருக்கும்! அந்த வழி நமக்கு ஆகாது என்பதால்தான், அறநெறிகளையெல்லாம் நமக்குப் புகட்டி – அரசியல் நாகரீகத்தோடு கழகத்தை வளர்த்தார் அண்ணா! 'தென்னாட்டு காந்தி' என்ற பெயரையும் பெற்றார்!

'காந்தியின் சீடர்கள்' என்று தங்களைச் சொல்லிக் கொண்டவர்கள் காந்தியின் அறவழியினின்று பிறழ்ந்து – வன்முறைகளிலும், வாயடி கையடிகளிலும் ஈடுபட்டதால்தான், இன்றுள்ள நிலைக்கு ஆளானார்கள்! இந்த உண்மையை நாம் என்றும் மறந்துவிடக் கூடாது!

கழகம் ஏதோ 'அதிர்ஷ்டவசமாக' வளர்ந்து விட்டதாகச் சிலர் இன்னமும் கருதிக்கொண்டிருக்கிறார்கள்; அடுக்குச் சொல் பேச்சாலும், நாடகம்--திரைப்படங்களுக்குக் கதை--வசனம் எழுதியதாலும்தான் வளர்ந்துவிட்டது என்று நம்பி--மாற்றாரும் அந்தத் துறையில் ஈடுபட்டுப் பார்த்தார்கள்; என்னென்ன வழிமுறைகளை அண்ணா கையாண்டு கழகத்தை வளர்த்தாரோ அந்த முறைகளையெல்லாம் காப்பியடிக்கச் சில கட்சியினர் முனைகிறார்கள்; ஆனால், அண்ணா கொண்டிருந்த சிறந்த பண்பாட்டை அவர்கள் கடைபிடிக்க முயலுவதாகத் தெரியவில்லை!

அண்ணாவைப்போல அழகாகப் பேசக்கூடியவர்கள்கூட, மாற்றுக் கட்சிகளிலே இருக்கக்கூடும்; அண்ணாவைப் போன்ற உள்ளமும் -- மனப் பக்குவமும் அத்தகையவருக்கு இருக்க வேண்டும்; அது இல்லாதவரையில், வேறு எவராலும் கழகத்தைப்போலத் தங்கள் கட்சியை வளர்க்கவும் முடியாது -- கழகத்தை அழித்து ஒழித்துவிடவும் முடியாது!

கழகத்திற்கு அண்ணா அவர்கள் அமைத்துள்ள அடித்தளம் அவ்வளவு எளிதாக நொடித்துப்போகக் கூடியதல்ல; அண்ணா இப்போது இல்லையென்றாலும், அவர் போட்டுவிட்டுச் சென்றுள்ள அடித்தளம் இன்னும் பல தலைமுறைகளுக்கு அசைக்க முடியாதது!

பேரறிஞர் அண்ணாவின் வழித் தோன்றல்களாகக் கலைஞரும் -- நாவலரும் -- அவர்கள் பின்னே தொண்டர்களாகிய நாமும் இருந்து, அண்ணா வழி கழகத்தையும்--கழக அரசையும் நடத்திச் செல்கிறோம்; 'இந்தக் கழகத்தையும் -- கழக அரசையும் அழித்துவிட்டுத்தான் மறுவேலை' என்று இங்குள்ள சில 'பெரிய மனிதர்'கள் சவால் விட்டுக்கொண்டிருக்கிறார்கள்; அவர்களெல்லாம், அண்ணாவையும் -- அண்ணாவின் தத்துவத்தையும் புரிந்துகொள்ளாதவர்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

அண்ணா நமக்குச் சொல்லித் தந்துள்ள தாரகமந்திரமான கடமை -- கண்ணியம் -- கட்டுப்பாடு ஆகிய மூன்றையும் நமது உயிர் மூச்சாகக்கொண்டு பணியாற்றுவோமேயானால், நம்மை யாராலும் அசைக்க முடியாது; இன்னும் இரண்டாண்டில் கழகத்தின் வெள்ளிவிழாவும் -- அடுத்துப் பொன்விழாவும் -- வைர விழாவும், நூற்றாண்டு விழாவும் கொண்டாடத்தான் போகிறோம்!

**வாழ்க -- அண்ணா!**
**வாழ்க -- தி. மு. க.!**

---

மாநிலத்துக்கு எதிராக மத்திய அரசு

கிளப்பும் மற்றொரு விவகாரம்

# அஞ்சல் துறை பற்றிப் பேச மாநிலங்கட்கு உரிமை இல்லையா?

## சட்டமன்றத்தில் கேள்வியை அனுமதிக்கக்கூடாதாம்

### தமிழக அரசின் கடிதத்துக்கு மத்திய அமைச்சுத் துறைகளின் திமிரான பதில்

புதுடில்லி, செப். 14—

**அஞ்சல் -- தந்தி தொடர்பான கேள்விகளை மாநிலச் சட்டமன்றங்களில் அனுமதிக்கக்கூடாது என்ற அஞ்சல் -- தந்தித் துறையின் சுற்றறிக்கை குறித்துத் தமிழ்நாடு அரசு மத்திய அரசை விளக்கம் கேட்டிருப்பதாகத் தெரியவருகிறது.**

**இந்தப் பிரச்சினை, ஒரு முக்கிய அரசியல் சட்டச் சிக்கலைத் தோற்றுவிக்கக்கூடும் என்று நோக்கர்கள் கருதுகின்றனர்.**

சில நாட்களுக்குமுன்: அஞ்சல்--தந்தித் துறை, எல்லா மாநில அரசுகளுக்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியிருந்தது; அதில், 'மத்திய அரசின் அதிகாரத்துக்குட்பட்ட அஞ்சல் -- தந்தித் துறை சம்பந்தப்பட்ட கேள்விகளைச் சட்டமன்றத்தில் அனுமதிக்க வேண்டாம்' என்று தெரியப்படுத்தியிருந்தது; 'அப்படி அனுமதிக்கப்பட்டால், கேட்கப்படும் கேள்விகளுக்குரிய பதில்களை அளிக்க அஞ்சல்--தந்தித் துறையால் இயலாமற் போகக்கூடும்' என்றும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

ஆனால், இதைத் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்ளவில்லை; 'அஞ்சல்-தந்தித் துறை மத்திய அரசின் அதிகாரத்திற்குட்பட்டதாகும் என்றாலும், அந்தந்தப் பகுதிகளில் இயங்கும் அஞ்சல்--தந்தித் துறையின் நடவடிக்கைகள்--அந்தந்தப் பகுதிகளைப் பாதிக்கக் கூடியவையாகையால்--மாநிலச் சட்டமன்றங்களில் அவை சம்பந்தப்பட்ட கேள்விகள் அனுமதிக்கப்பட வேண்டியது அவசியமாகும்' என்று தமிழக அரசு எடுத்துரைத்தது.

மேலும், மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்ட கேள்விகள் நாடாளுமன்றத்தில் கேட்கப்படும்போது, அது குறித்துத் தகவல்களை மாநில அரசுகள் அளித்து வருவதையும் தமிழக அரசு சுட்டிக்காட்டியது.

எனவே, மாநில அரசுகளின் கேள்விகளுக்கு அஞ்சல்--தந்தித் துறை பதில் அளிக்காமலிருப்பதில் எந்தவித நியாயமும் இல்லை என்பது தமிழக அரசின் கருத்தாகும்.

சில மாதங்களுக்கு முன் இது குறித்த பிரச்சினை எழுந்தபோது, அதனை, மத்திய சட்டத்துறை மற்றும் நாடாளுமன்ற விவகாரத் துறை ஆகியவைகளின் கருத்தறிய அனுப்பப்பட்டது.

அந்த இரு அமைச்சுத் துறைகளும், அந்தந்த வட்டாரங்களில் அமைந்திருப்பதனாலேயே அஞ்சல்--தந்தித் துறை பற்றி மாநில அரசு அக்கறை செலுத்த வேண்டிய ஒன்று எனக் கருதக் கூடாது என்றும், எனவே, மாநில அரசுகளின் கேள்விகட்குப் பதிலளிப்பது, அஞ்சல்- தந்தித் துறையின் விருப்பத்தைப் பொறுத்தது என்றும் கருத்தறிவித்ததாகக் கூறப்படுகிறது.

சட்டத் துறை -- இன்னும் ஒரு படி மேலே சென்று, அஞ்சல் -- தந்தித் துறை மத்திய அரசின் அதிகாரத்துக்கு உட்பட்டதாகையால், மாநிலச் சட்டமன்றங்களில் அது குறித்த கேள்விகளை 'அனுமதிக்கக் கூடாது' என்று கூறியிருக்கிறதாம்!

---

# தமிழ்நாட்டில் 10 மாவட்டங்களின் வறட்சிப் பகுதிகள்

திருச்சி, செப். 16—

தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்த வருவாய் வாரிய உறுப்பினர்கள் வறட்சிப் பகுதிகளைக் கண்டறிந்தனர்.

பத்து மாவட்டங்களில் கீழ்க்கண்ட பகுதிகளை, 'வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள்' என அவர்கள் அறிவித்துள்ளனர்.

இப்பகுதிகளில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்தத் தமிழ்நாடு அரசு ரூ 25 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது; விவசாயிகளிடம் அரசாங்கக் கடன் வசூல் செய்வதும் இந்த ஆண்டு இறுதி வரையில் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் வறட்சிப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ள இடங்களின் விவரம் வருமாறு:—

**செங்கற்பட்டு**

வாலாசாபாத், திருத்தணி, திருப்பெரும்புதூர், உத்திரமேரூர் ஆகிய தாலுகாக்கள்.

**வட ஆற்காடு**

வாலாஜா, ஆற்காடு, அரக்கோணம், திருப்பத்தூர், குடியாத்தம், வாணியம்பாடி ஆகிய தாலுகாக்கள்.

**தென் ஆற்காடு**

செஞ்சி, திண்டிவனம் தாலுகாக்கள்.

**தர்மபுரி**

கிருஷ்ணகிரி அணைத் திட்ட ஆயக்கட்டுப் பகுதிகள் தவிர, தர்மபுரி மாவட்டம் முழுவதுமே வறட்சிப் பகுதிகள்.

**சேலம்**

ஆத்தூர் தாலுகாவில் தலைவாசல், வீரகனூர், கங்கவல்லி ஆகிய பிர்க்காக்கள்.

சேலம் தாலுகாவில் வாழைப்பாடி, கரியபட்டி ஆகிய பிர்க்காக்கள்.

நாமக்கல் தாலுகாவில் எருமைப்பட்டி, பரமத்தி, சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியங்கள்.

**கோவை**

கோபிசெட்டிப்பாளையம் தாலுகாவில் தலைவாசல், நம்பியூர், சத்தியமங்கலம், பவானிசாகர் ஊராட்சி ஒன்றியங்கள்.

அவினாசி தாலுகாவில் அன்னூர், காரமடை, அவினாசி பிளாக்குகள்.

கோவைத் தாலுகாவில் சர்க்கார் சாமகுளம், பெரியநாயக்கன் பாளையம், கோவை (சில பகுதிகள்) பிளாக்குகள்.

பல்லடம் தாலுகா முழுவதும்.

மூலனூர், ஒத்தியூர், காங்கயம், குன்னூடம் பிர்க்காக்கள். (கீழ் பவானி, அமராவதி, பரம்பிக்குளம், ஆளியாறு, காவிரி தென்கரைக் கால்வாய் ஆகிய பாசனத் திட்டங்களின் ஆயக்கட்டுப் பகுதிகள் தவிர.)

**திருச்சி**

திருச்சி தாலுகாவில் மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம்.

மணப்பாறை தாலுகாவில் மணப்பாறை, வையம்பட்டி மருங்காபுரி ஊராட்சி ஒன்றியங்கள்.

குளித்தலை தாலுகாவில் கடவூர், கிருஷ்ணராயபுரம், குளித்தலை ஊராட்சி ஒன்றியங்கள்.

முசிறி தாலுகாவில் தாத்தையங்கார்பேட்டை ஊராட்சி ஒன்றியம்.

துறையூர் தாலுகாவில் துறையூர், உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியங்கள்.

பெரம்பலூர் தாலுகாவில் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம்.

கரூர் தாலுகா முழுவதும்.

**மதுரை**

உசிலம்பட்டி, சேடப்பட்டி, ஆண்டிப்பட்டி, திண்டுக்கல் ரெட்டியார்சத்திரம், ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி, உத்தமபாளையம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்கள்.

**திருநெல்வேலி**

மாதவகுறிச்சி, சங்கரன்கோவில், இராமநாதபுரம், குருவிக்குளம், சேந்தமங்கலம், கோவில்பட்டி, எட்டயபுரம், ஒட்டப்பிடாரம் ஆகிய பிர்க்காக்கள்.

**இராமநாதபுரம்**

திருவில்லிப்புத்தூர், மல்லி, சேத்தூர் ஆகிய பிர்க்காக்கள்.

---

**பேச்சாளர் முகவரி:**

விருதை ஜெயராஜ்,
அண்ணா பதிப்பகம்,
54, தபால் ஆபீஸ் தெரு,
விருதுநகர்.

---


# தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டத்திற்கு என் நன்றி.

"இதன் உதவியால் நானும் ஒரு நாள் டாக்டராவேன்!"

(தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டு விற்பனை மூலம் கிடைக்கும் வருவாய், கல்வி, மருத்துவம், வீட்டு வசதி போன்ற சமுதாய முன்னேற்றத்துக்கான பல்வேறு வழிகளில் பயன்படுத்தப்படுகிறது)

ரூ. ஒரு லட்சம் பரிசு பெறலாம்

மொத்தப் பரிசுத் தொகை ரூ. 7,00,000

முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய் (ஒவ்வொரு வரிசைக்கும்)

குலுக்கல் நாள்: 30-9-1972

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை: ரூ. 1/- தான்

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி,
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2
விளம்பர வெளியீடு: இயக்குநர் செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு, சென்னை-9.

2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

வாவோ லட்ச ரூபாய்


---

# பிற மாநிலங்களுக்கும் வழிகாட்டும் தமிழகம்

## ஆளாக்கிய அண்ணனை எண்ணி கலைஞர் மகிழ்ச்சி

### போலீசுப் பரிசளிப்பு விழாவில் உரை

காஞ்சிபுரம், செப். 16—

"தமிழ் நாட்டின் காவல்துறை தலையாய பெருமை வாய்ந்த துறை என்பதை இந்திய நாட்டில் அனைவரும் ஒப்புக்கொள்வார்கள்; இந்தியிலேயே தமிழ்நாட்டுக் காவல் துறையில் ஆற்றியிருக்கிற பணிகள் மெச்சத் தகுந்தவை -- போற்றத் தகுந்தவை -- புகழத்தகுந்தவைகளாகும்.

"காவல் துறையில் இருப்பவர்கள், புதிதாக சட்டம் -- ஒழுங்கு -- அமைதி ஆகியவைகளை நிலைநாட்டத் தருவிக்கப்பட்டவர்களல்லர்; நம்மில் ஒரு சாரார்; சமுதாய நலன்களைக் காப்பாற்ற -- சட்டம், ஒழுங்கு அமைதி கெடாமல் பாதுகாப்பதற்காக இந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறார்கள் -- என்ற நினைவோடு நாட்டு மக்கள் காவல் துறையில் இருப்பவர்களுக்குத் தங்கள் ஒத்துழைப்பைத் தந்தாகவேண்டும்.

"பொழுதெல்லாம் கடமையாற்றி -- அல்லும் பகலும் மிகக் கடுமையான சோதனைகளுக்கிடையே தங்கள் வாழ்க்கையை ஒப்படைத்துப் பணியாற்றி வருகின்ற காவல் துறை நண்பர்களுக்கு மேலும் உற்சாகத்தைத் தர வேண்டுமென்பதற்காகவும், மேலும் அவர்கள் ஊக்கத்தோடு தங்கள் பணியைஆற்ற வேண்டுமென்பதற்காகவும் அவர்களுக்குப் பதக்கங்களைப் பரிசளிக்கின்ற விழாவினைத் தமிழக அரசு தேர்ந்தெடுத்திருக்கிறது"

என்று, முதலமைச்சர் கலைஞர் அவர்கள், செப். 13-ம் நாளன்று காஞ்சிபுரத்தில் காவல் துறையினருக்கு முதலமைச்சரின் 'அண்ணா பதக்கம்' வழங்கும் விழாவில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

இச் சிறந்த முறையில் பணியாற்றிய போலீசார் -- தீயணைப்புப் படையினர் 25 பேர் இந்த ஆண்டில் விருதுகளும் -- ரொக்கப் பணமும் பெற்றனர்.

இதற்கான விழா, செங்கற்பட்டு மாவட்டப் போலீசு நிலையத்திற்கு எதிரிலுள்ள 'அண்ணா காவல் அரங்கத் திடலில் நடைபெற்றது.

விழாவிற்கு இன்ஸ்பெக்டர் -- ஜெனரல்--எப். வி. அருள் தலைமை தாங்கினார்.

போலீசாரின் அணிவகுப்பு மரியாதையை முதலமைச்சர் ஏற்றுக் கொண்டார்.

விழாவில் மாவட்டக் கலெக்டர் கிருஷ்ணமூர்த்தி, நாடாளுமன்ற—சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

விழா முடிவில் போலீசாரின் விளையாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

அண்ணா பதக்கங்களையும்-மானியங்களையும் வழங்கி முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"விழா நடத்துகின்ற நாளாக நான் தேர்ந்தெடுத்த நாள் எது என்பதும் உங்களுக்குத் தெரியும்; கடந்த மூன்றாண்டுகளாக தமிழகத்தில் வெவ்வேறு நகரங்களில் செப்டம்பர் 15-ம் நாள் -- அண்ணா பிறந்த நாளில் இந்த விழா நடைபெற்றிருக்கிறது.

இந்த ஆண்டு இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே காஞ்சிபுரத்தில் இந்த விழா நடைபெறுவதற்குக் காரணம் உண்டு; தலைமை அதிகாரி ஒரு முக்கியமான மாநாட்டை யொட்டி வெளிநாட்டிற்குச் செல்கிற காரணத்தால் இரண்டு நாள் முன்னதாக நடைபெறுகிறது.

எல்லா மாவட்டங்களையும்விடச் செங்கற்பட்டு மாவட்டத்தில் எதுவுமே கொஞ்சம் முந்தி நடைபெறும் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு என்பதை, செங்கற்பட்டு மாவட்ட மக்களுக்கெல்லாம் அண்ணாவின் பிரதிநிதியாக நின்று சொல்லிக் கொள்கிறேன்.

பரிசு -- பதக்கங்கள் வழங்குவது, அவைகளைப் பெற்றவர்களை ஊக்கப்படுத்துவதற்காக மாத்திரமல்ல -- 'பெற வேண்டியவர்கள் இதுபோன்ற நற்பெயர் எடுக்க வேண்டும் -- அருஞ்செயல்கள் புரிய வேண்டும்' என்ற ஆர்வத்தைப் பெறவும் இந்த நிகழ்ச்சிகள் உதவுகின்றன!

மத்தியிலேகூட தலைசிறந்த போலீசு அதிகாரிகளுக்குப் பதக்கங்கள் -- விருதுகள் வழங்கப்படுகின்றன; என்றாலும், நான் பெருமையோடு சொல்லிக் கொள்வேன் -- தமிழ்நாட்டில் நடைபெறுகின்ற இந்த விழா ஒன்றில்தான், பதக்கங்கள் பரிசளிப்பது என்று மாத்திரமல்லாமல், அவர்களுக்கு ரூ 3,000 -- 2,000 என்ற அளவிற்குப் பண முடிப்பு தரப்படுகிறது.

அண்மையில் டெல்லியில் நடைபெற்ற ஐ. ஜி-க்கள் மாநாட்டில் ஆண்டுதோறும் நடைபெறுகின்ற தமிழக விழா குறித்து நம்முடைய ஐ. ஜி. எடுத்துச் சொன்னதாகவும், அதற்குப் பிறகு இந்தியாவிலே இருக்கின்ற பல்வேறு மாநிலங்களிலிருந்து நம் ஐ. ஜி. அவர்களிடம், 'இந்த நிகழ்ச்சி எப்படி நடைபெறுகிறது -- எப்படி பரிசுகள் அளிக்கப்படுகின்றன' என்பதையெல்லாம் தெரிந்துகொள்ளும் வகையில் விளக்கங்கள் கேட்பதாகவும் அவர் என்னிடம் சொன்னார்; நான் மகிழ்ந்தேன் -- என்னை எண்ணியல்ல -- என்னை ஆளாக்கிய அண்ணனை எண்ணி!

தமிழகம் பல்வேறு வகையிலும் பல மாநிலங்களுக்கு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது; அதைப் போலவே, காவல் துறை நண்பர்களை ஊக்கப்படுத்துவதிலும் -- உற்சாகப்படுத்துவதிலும், வழிகாட்டியாக அமைந்திருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது!

ஐ. ஜி. அவர்கள் பேசுகின்ற நேரத்தில் பலமுறை, 'நாங்கள் பல நன்மைகளைப் பெற்றிருக்கிறோம்; நன்றி மறக்கமாட்டோம்' என்று சொன்னார். எப்போதாவதுதான் இப்படிப்பட்ட குரல் என் காதுகளில் விழுகிறது; ஆகவே என்னைப் பொறுத்த வரையில், இது ஒரு பொன்னாள்தான்.

எப்போதாவது இப்படிப்பட்ட குரல் விழுகிறதென்றால் இந்தத் துறையிலிருந்து என்று தவறாகக் கருதிக்கொள்ள வேண்டாம்; மொத்தமாகத் தமிழ்நாட்டில், 'நாங்கள் நன்றி மறக்கமாட்டோம்' என்று என்னைப் பார்த்துச் சொல்கின்றவர்கள் மிக மிகக் குறைவாக இருக்கிறார்கள் என்ற காரணத்தால்தான், 'எப்போதாவது விழுகிறது' என்று சொன்னேன்.

நான் பொறுப்பேற்றுக் கொண்டதும், போலீசாருடைய வாழ்க்கைப் பிரச்சினைகளை அறியவும் -- போலீசுத் துறையை மேலும் பலப்படுத்தவும், குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கான ஏதுகள்--அதற்காக வழங்கவேண்டிய கருவிகள் முதலியவற்றை ஆராயவும் போலீசுக் கமிஷன் போடப்பட்டு, அவர்கள் நூற்றுக்கு மேற்பட்ட பரிந்துரைகளை வழங்கியிருக்கிறார்கள்; இதுவரையில் 20-க்கு மேற்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கின்றன; மேலும் எஞ்சியுள்ள பரிந்துரைகளும் செயற்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி கூறிய தலைமை அதிகாரி இரண்டொரு கோரிக்கைகளையும் வைக்கத் தவறவில்லை; அமைச்சர்களை வரவழைத்துவிட்டு கோரிக்கைகளை வைக்காவிட்டால் விழா நிறைவு பெறாது.

நிலங்களைப் பட்டா செய்து காவலர்களுக்குத் தரப்பட வேண்டுமென்பது ஒரு கோரிக்கை; நான் உடனடியாக அதை இங்கேயே பரிசீலித்து முடிவெடுக்க இயலாது என்றாலும், அது பரிசீலிக்கப்படும்.

'காவல் துறையினருக்கு வாரம் ஒருமுறை கட்டாய விடுப்பு உண்டு; அந்த நாளில் ஏதாவதொரு முக்கியமான காரியத்திற்காக—அவசரத் தேவைக்காக அவர்கள் அந்த விடுப்பிலிருந்து விடுபட்டு பணியாற்றுவார்களானால், அவர்களுக்கு அந்த ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் தரப்படுகிறது' என்று சொன்னார்; அதைக் கேட்டு எனக்கே பரிதாபமாக இருக்கிறது; அதுவும், '20 ஆண்டுக் காலமாக இந்த நிலை இருந்து வருகிறது' என்று சொன்னார்; 'அதை எங்கே அதிகமாகக் கேட்பார்களோ' என்று கருதினேன்; என்னை உணர்ந்து--நிதி நிலையை உணர்ந்து, 'ஒரு ரூபாயை இரண்டு ரூபாயாக ஆக்கித் தாருங்கள்' என்று கேட்டார்கள்; நான் இப்போதே அந்த ஒரு ரூபாய் இரண்டு ரூபாயாக நிச்சயமாக ஆக்கப்படும் என்ற உறுதியை அளிக்கிறேன்,

நல்ல மண்ணில் நடைபெறுகின்ற இன்றைய விழாவில் கலந்து கொள்வதில் பெருமையடைகிறேன்.

பரிசும் -- பதக்கமும் பெற்றவர்கள் மேலும் உற்சாகத்தோடு தங்கள் பணியை நாட்டிற்கு அளிக்கவேண்டும்.

பரிசுகளைப் பெற வேண்டியவர்கள், அவைகளைப் பெறும் வகையில் தங்கள் பணியை ஆற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

# தி. மு. க. ஆட்சியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மைகிடைக்கவில்லையா?

## காமராசர் கூற்றுக்கு முதலமைச்சர் பதில்

மதுரை, செப். 16—

"தி. மு. கழக அமைச்சரவையில் தாழ்ந்தப்பட்டவர்களின் பிரதிநிதிகளாக இரண்டு பேர் இருந்தும் தீண்டாமையால் தாழ்த்தப்பட்டோர் கொடுமைப்படுத்தப்படுவதாகவும், காங்கிரசு ஆட்சிக் காலத்தில் தாழ்த்தப்பட்டோருக்குப் பாதுகாப்பு இருந்ததாகவும் காமராசர் கூறியிருப்பது சரியா—தவரு என்பது தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தெரியும்.

"நேற்றையத் தினம் தஞ்சை மாவட்டத்தில் வழங்கிய 1,57 000 குடியிருப்பு மனை உரிமைப் பட்டாக்களில் ஓர் இலட்சம் தாழ்த்தப்பட்ட விவசாயத் தொழிலாளர்களும் பயனடைந்திருக்கின்றனர்; பிற்பட்ட மக்களாக உள்ள 48,000 விவசாயத் தொழிலாளர்களும், இதர வகுப்பினர் 9,000 பேர்களும் பயன்பெற்றிருக்கின்றனர்.

"ஆலயங்களில் அறங்காவலர் குழுவில் ஓர் தாழ்த்தப்பட்ட உறுப்பினர் இருக்கவேண்டும் என்று சட்டம் நிறைவேற்றியிருப்பது இந்த அரசுதான்.

"தீண்டாமை ஒழிப்பைத் தீவிரமாகச் செயல்படுத்த தனிக் காவல் பிரிவு (போலீசுப் படை) அமைத்ததும் இந்த அரசுதான்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இங்கு செய்தியாளர்களிடம் விளக்கிக் கூறினர்; மதுரையில் செய்தியாளர்கள் அவரைச் சந்தித்துக் கேட்ட கேள்விகளும் — முதலமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு :—

### வேலைவாய்ப்பு—தமிழக அரசு தீவிர கவனம்

கேள்வி :—"தமிழ்நாட்டில் வேலையில்லாமல் தவிப்பவர்களுக்கு வேலை கொடுக்க முடியாத தி. மு. கழக அமைச்சர்கள், பதவியில் நீடிக்கலாமா என்று காமராசர் கூறியிருக்கிறரே — உங்கள் கருத்து என்ன ?"

பதில் :— "வேலையில்லாதோர் பிரச்சினை தமிழ்நாட்டில் மட்டும் உள்ளது அல்ல — இந்தியா முழுவதும் உள்ளது; இது 1967-ம ஆண்டுக்குப் பிறகு ஏற்பட்டதும் அல்ல; முன்பு இருந்தே வளர்ந்து வருகின்ற பிரச்சினையாகும்; காமராசரும்—மற்றவர்களும ஒன்ருக இருந்து நடத்திய காங்கிரசு ஆட்சியிலேயே போட்ட திட்டங்களின் விளைவு இந்தப் பிரச்சினை.

தாங்கள் போட்ட 5 ஆண்டு திட்டங்கள் ஏழை—எளியவர்களையும், வேலையிலாதவர்களையும் வாழவைக்கவில்லை — என்று காங்கிரசு ஒன்ருக இருந்த போது திருச்சி மாநாட்டில் காமராசரே ஒப்புக்கொண்டிருக்கிருர்; வேலையில்லாத் திண்டாட்டம் அப்போதே இருந்ததால்தான், வேலை தேடித்தரும் அலுவலகங்கள் தேவைப்பட்டன.

"தமிழ்நாடு அரசு தன்னுடைய சக்திக்கும் — அதிகாரத்துக்கும் உட்பட்ட வகையில் வேலை வாய்ப்பு வழங்குவதில் தீவிரக் கவனம் செலுத்துகிறது."

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டங்கட்கும் பேரறிஞர் அண்ணு பிறந்த நாளான செப். 5-ந் தேதிமுதல் விரிவுபடுத்தப்படுகிறது; தஞ்சை மாவட்ட விவசாயிகள் குடியிருக்கும் நிலம் அவர்கட்கே சொந்தமாவதுபோல், மற்ற மாவட்ட விவசாயத் தொழிலாளர்கள் குடியிருக்கும் நிலங்களும் அவர்கட்கு உரிமையாக்கப்படும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், கும்பகோணத்தில் 1,25,000 விவசாயத் தொழிலாளர்களுக்குக் குடிமனை உரிமைப் பட்டா வழங்கிப் பேசுகையில அறிவித்தார்.

## இடைத்தரகர்கள்—முதல்வர் எச்சரிக்கை

இந்த விழாவில் மின்வாரிய வேலைக்கு ஆள் எடுப்பது குறித்து விளக்கிப் பேசுகையில் முதலமைச்சர் தெரிவித்ததாவது :—

"மின் வாரியத்தில் 3000 எழுத்தர் வேலைக்கு மனுக்கள் அனுப்ப அழைப்பு விடுக்கப்பட்டது.

ஒவ்வொரு மனுவுடனும் ரூ 5 விண்ணப்பக் கட்டணம் அனுப்ப வேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தது.

இந்த எழுத்தர் வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்படாதவர்கட்கு அவர்கள் கட்டிய கட்டணம் ரூ. 5-ஆக இருந்தாலும் — ரூ. 10-ஆக இருந்தாலும் அந்தப் பணத்தை அவர்கட்கே திருப்பி அனுப்பிவிடும்படி மின்வாரிய அதிகாரிகட்குச் சொல்லியிருக்கிறேன்.

ஆண்டவனுக்கும் — மனிதனுக்கும் இடையில் தரகர்கள் இருப்பதுபோல், அரசுக்கும் — மக்களுக்கும் இடையில் தரகர்கள் இருக்கிருர்கள்; இப்படிப்பட்ட தரகர்களிடம் பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

### அமைச்சர்கட்கு உத்தரவு

நேர்முகத் தேர்வில், தகுதி உள்ளவர்களும் — தக்க பதில் தருவோரும்தான் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்; இதுபோன்ற வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்படும்போது ஓர் அமைச்சருக்கு, இன்னேர் அமைச்சர் சொன்னாலும் கேட்கக்கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லி வைத்திருக்கிறேன்; எனவே, பொதுமக்கள், தரகர்களிடம் கண்காணிப்புடன் இருக்க வேண்டும்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible]

### பழைய நினைப்பு போலும்

கேள்வி:— "தமிழ்நாடு அரசின் திட்டங்களுக்காக மத்திய அரசு கொடுக்கும் உதவிப் பணம், சரியாகப் பயன்படுத்தப்படுவதில்லை — என்று மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம் கூறியிருக்கிருரே — உங்கள் கருத்து என்ன ?"

பதில் :— "பழைய காலத்தை நினைத்துக்கொண்டு பேசுகிருர்."

## குடந்தையில் அண்ணு பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள்

குடந்தைப் பெருநகர் — வட்ட தி. மு. க. சார்பில் அண்ணு பிறந்த நாள் விழா 15—9—72 முதல் 1—10—72 வரை நாள்தோறும் கொண்டாடப்படுகிறது; அமைச்சர்கள் — நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள் — கழக முன்னணி, கூட்டணிப் பேச்சாளர்கள் பங்கேற்கின்றனர்; இசை — கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன; விழாவில் பங்கு பெறுவோர் :—

செப்டம்பர்

17 : பி. ஆர். இலட்சுமிகாந்தன்
18 : செ. கந்தப்பன் எம்.எல்.ஏ.
19 : அப்துல் சமது எம்.பி.
20 : அமைச்சர் க. இராசாராம்
21 : ஆலடி அருணு எம்.எல்.ஏ.
22 : திருவாரூர் தங்கராசு
23 : அமைச்சர் அன்பில் தர்மலிங்கம்
24 : டி. கே. சீனிவாசன்
25 : சி. பி. கனகசபை எம் சி.
26 : அமைச்சர் என். வி. நடராசன்
27 : ஏ. கே. வில்வம்
28 : ஏ. வி பி. ஆசைத்தம்பி
29 : சட்டப்பேரவைத் தலைவர் கே. ஏ. மதியழகன், எஸ். எஸ். தென்னரசு எம்.எல்.சி.
30 : கோவை செழியன்எம்.எல்.ஏ.

அக்டோபர்

1 : அமைச்சர் ச. இராமச்சந்திரன்

## வள்ளுவர்வாழ்கின்ருர்—திருக்குறள் கலைநிகழ்ச்சி அரங்கேற்றம்

அறிஞர் அண்ணு அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 17-9-72 மாலை 6-மணிக்கு கோடம்பாக்கம் ஆற்காடுசாலை காஞ்சி மணிமொழியார் தமிழ்க் கல்லூரியில்—கல்லூரி முதல்வர் திரு. த. பெரியாண்டவர் தலைமையில குறளேருழவர்இயற்றியுள்ள 'வள்ளுவர் வாழ்கின்ருர்' என்ற திருக்குறள் கலைநிகழ்ச்சி நிகழும்; அதன்பின மாணவர்கள் அறிஞர் அண்ணு அவர்கள்மீது இயற்றியுள்ள கவிதைதனைப் படிப்பார்கள்.

### மதுரை கா. வைகைநம்பி நிகழ்ச்சிகள்

17 : கோவை 21-வது வட்டம்; 18 : கோவை 14-வது வட்டம்; 22 : மதுரை 38-வது வட்டம்; 23 : மதுரை 40-வது வட்டம்; 24 : நாகர்கோவில்; 29 : மணலூர்—சிலைமான்.

போக்குவரத்துத் துறை அமைச்சர்

### ச. இராமச்சந்திரன் நிகழ்ச்சிகள்

செப். 17 காலை : திருச்சி—பகுத்தறிவாளர் மன்றச் சார்பில் நடைபெறும் தந்தை பெரியார் பிறந்த நாள் விழாவில் கலந்துகொள்ளல்.

நடக்க இருப்பவை

## அண்ணு பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டங்கள்

### 17—9—72

**திருச்சி**

தி. மா.—தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு பிஷப் ஹீபர் மைதானத்தில்; தலைவர்: எஸ். ஏ. ஜி. ராபி; பேசுவோர்: தந்தை பெரியார். அமைச்சர் க. இராசாராம், அமைச்சர் எஸ். இராமச்சந்திரன், ஆர். நாகசுந்தரம், மற்றும் பலர்.

**மாயூரம்**

நகர தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு நகராப் பூங்காவில்— மாணவர் சாரங்கபாணி அரங்கில்; தலைவர்: என். எம். முகம்மது சுகூது; பேசுவோர்: சட்டப் பேரவைத் தலைவர் கே. ஏ. மதியழகன், எல். கணேசன் எம். எல்.ஏ., எஸ். கலியமூர்த்தி ம. தங்கையன், பி. மதிவாணன், வை. மாணிக்கம், கே. நாராயணசாமி, ஜி. கே. மூர்த்தி ஆர். சொக்கலிங்கம், எஸ். வெங்கட்ராமன், பி. எஸ். குமார்.

**பணுருட்டி**

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு கடலூர்சாலை அண்ணு திடலில்; தலைவர்: ஏ. மணி: முன்னிலை: செ. குப்புசாமி-சி. இராசமாணிக்கம் எம்.சி.—சீனு செயராமன் — பி. சிவராமன்—பி. டி. எஸ். மணி—எம். எம். முகம்மது காசிம்; பேசுவோர்: திருப்பத்தூர் எஸ் இராமமூர்த்தி, வி. வி. சாமிநாதன் எம்.பி., ஆர். எம். கணேசன், ஆர். தண்டபாணி.

**கரம்பக்குடி**

நகர தி. மு. க. மற்றும் துணை மன்றங்கள் சார்பில் மாலை 6. மணிக்கு வள்ளுவர் திடலில்; தலைவர்: ஆ. சொக்கலிங்கம்; பேசுவோர்; புலவர் அருணு மற்றும் பலர்.

**திருச்சி-சிந்தாமணி**

உதய சூரியன் படிப்பகச் சார்பில் மாலை 6-30 மணிக்கு சிந்தாமணி புதுத்தெருவில்; தலைவர், சங்கரன்; பேசுவோர்: கோபி தமிழரசு, எம். எஸ் மணி. எஸ். ஏ. ஜி. ராபி, சு. நெடுமாறன், நடிகர் திருச்சி சௌந்தரராசன், டி. எஸ். குஞ்சிதபாதம், டி. வி. பொன்னுசாமி, டி. என். கோபாலகிருட்டிணன் சே. இரா. மதியழகன், அருணகிரன், இளங்கோ, வெங்கட்ராமன.

### 18—9-72

**மாயூரம்**

நகர தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு நகரம் பூங்காவில் — மாணவர் சாரங்கபாணி அரங்கில்; தலைவர்: என். வடிவேலு எம். சி., பேசுவோர்: கி. வீரமணி. கே. விநாயகம், என். வி. என். சோமு (துணை மேயர்), தம்பி ஏ. தேவேந்திரன் எம்.எல். ஏ., இரா. சிவப்பிரகாசம், கி. சத்தியசிவன், எம். மணி, ஆர். பாக்கியராஜ் எம்.சி., (இரவு 9 மணிக்கு ஆர். பழனிச்சாமி தலைமையிலும் — வை. இராஜசேகரன் முன்னிலையிலும் ஏ. கே. சி. நடராசன் குழுவினரின் கிளாரினட் இசை)

**பண்ணுருட்டி**

நகர தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு கடலூர் சாலை அண்ணு திடலில்; தலைவர்: ஆர். தண்டபாணி; முன்னிலையில: ஆர் எஸ். மணி, எம். சி. — பி. கே. கங்காதரன் — வி. இராமலிங்கம் — பி. மாலகிருஷ்ணன் - கே. கங்காதரன; பேசுவோர்: அமைச்சர் எஸ். இராமச்சந்திரன், ஏ. மணி (சதாசிவம் — சாந்தா குழுவினரின் 'அண்ணு வாழ்கின்ருர்' எனும் இசை நிகழ்ச்சி நடைபெறும்)

**கோவை**

14-வது வட்ட தி மு.க. மற்றும் துணை மன்றங்கள் சார்பில் மாலை 6 மணிக்கு ஆறுகாரனர் — டாடாபாமாத்தில்; தலைவர்: க. கவியரசு; பேசுவோர்: மதுரை கா. வைகைநம்பி, எஸ். ஏ. இராசமாணிக்கம் எம்.எல்.சி., கி. அரங்கநாதன் எம்.எல்.சி., பா. கோபால் எம்.எல்.ஏ., எ.எ. சுக்கூர், வெ. கிருட்டிணமூர்த்தி எம்.சி, இரா. கலைஞர் நம்பி, க. மருதாசலம், பி. கரும்புசாமி. த. மலரவன், எஸ். ஏ. ஆனந்தன், மற்றும் பலர்.

**கரம்பக்குடி**

நகர தி.மு.க. மற்றும் துணை மன்றங்கள் சார்பில் மாலை 6 மணிக்கு வள்ளுவர் திடலில்; தலைவர்: ஆ. சொக்கலிங்கம்; பேசுவோர்: நள்ளாற்று நடராசன் மற்றும் பலர் (மதுரை உதய சூரியன் கலைக்குழு இரா. முருகேசன் — கங்காவின் 'காலம் கனிகிறது' எனும் கலைநிகழ்ச்சி நடைபெறுகிறது).

## அண்ணு பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள் :

### 17—9—72

**கரம்பக்குடி**

நகர தி. மு. க. மற்றும் துணை மன்றங்கள் சார்பில் கவி அரங்கம்; மாலை 6-மணிக்கி வள்ளுவர் திடலில்; தலைவா: மு. அருணு; பங்கேற்போர்: சுப. முருகேசன, மழ. பழனியப்பன், க. செ. மலையாண்டிப் புனிதன், ச. அன்பரசன், பாலையா; வரவேற்பு: ரெ. இராமமூர்த்தி.

**திருச்சி — சிந்தாமணி**

அண்ணு பிறந்த நாள் விழா — உதயசூரியன் படிப்பகத் திறப்பு விழா — 500 ஏழைகளுககு உணவு அளித்தல்; பிற்பகல் 2-மணிக்கு புதுத் தெருவில; தலைவர்: எம. எஸ். வெங்கடாசலம்; கட்டடத் திறப்பாளர்: அமைச்சர் அன்பில தர்மலிங்கம்; கா. காளிமுத்து முன்னிலையில ஆர். நாகசுந்தரம் ஏழைகளுக்கு உணவு அளிப்பார்.

**சென்னை 98-வது வட்டம்**

தி. மு. க. சார்பில் காலை 9-மணிககு இராஜா அண்ணமலைபுரம் காமராசர் சாலையில (நாராயணசாமி தோட்டம்); வரவேற்பு: என். பி. இராமாஜெயம்; கொடியேற்றுபவர்: அமைச்சர என். வி. நடராசன; அண்ணு படத் திறப்பாளர்: அ. சி துளசிங்கம் எம்.சி.; உணவு வழங்குதல்: டி. கே. கமாலி; சிறப்புரை: எஸ். வி. வேலு எம்.சி., கே. கோவிந்தசாமி எம்.சி., இர. காசிச்சாமி எம.சி., த. சாரங்கன எம்.சி., அ. செலவராசன் எம் சி., ஏ. பக்தவதசலம, வி. மாணிக்கம்.

அண்ணு அவர்களின் 64-ம் ஆண்டைக் குறிக்கும் வகையில் 64 கழகக் கொடிகளை வட்டக் கழகத் தோழர்கள் 64 பேர்களால் ஏற்றி வைக்கப்படுகிறது.

**சென்னை — சேத்துப்பட்டு**

அறிஞர் அண்ணு படிப்பகச் சார்பில் காலை 10 மணிககு: தலைவர்: இரா. கதிர்வேலு; கொடியேற்றுபவர்: சண்முகம; இனிப்பு வழங்குபவர்: சோ. மா. இராமசந்திரன; பேசுவோர்: தி. சா. சுப்பையா, சா. முத்து, சி. சண்முகம, இராமமூர்த்தி, மற்றும் பலர்.

**மதுரை நகர்**

29-வது வட்ட தி. மு. க. சார்பில் காலை 10 மணிக்கு துணை மேயர் எம். ஆர். சங்கரன் 9 இடங்களில் கொடியேற்றுவார்.